DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

............

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE AT PALLIPATTU

Calendar

Miscellaneous

Preliminary Register Case No. C.C. 52 of 2016 PW: 4

Sessions

Deposition of witness for Prosecution / Defence / Court

Name : தயாளன்

Father's Name :

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 12/04/2022.

தேதி..12.04.2022, C.C. 52/2016, அ.த.சா. 4 தயாளன் அவர்களின் முதல் விசாரணை...

நான் அம்மையார் குப்பம் கிராமத்தில் வசித்து வருகிறேன். கூலி வேலை செய்து வருகிறேன். சாலை விபத்தில் காயமடைந்த குப்புசாமி மற்றும் அதில் இறந்துபோன அவரது மனைவி மல்லிகாவை எனக்கு தெரியும். எங்கள் ஊரைச்சேர்ந்தவர்கள் ஒரே தெருவில் வசித்து வருகிறோம். தேதி, மாதம் ஞாபகமில்லை. சுமார் 13 ஆண்டுகளுக்குமுன்பு ஆர்.கே.பேட்டையில் விபத்து ஏற்பட்டதாக கேள்விப்பட்டேன். அதில் குப்புசாமியின் மனைவி மல்லிகா இறந்துவிட்டார். அவரது பிரேதத்தை 2 நாட்கள் கழித்து வீட்டிற்கு எடுத்து வந்தார்கள். குப்புசாமியை சோளிங்கர் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்து சென்றதாக கூறினார்கள். அங்கிருந்து மேல் சிகிச்சைக்கு வேலூர் மருத்துவமனைக்கு அழைத்து சென்றதாக கூறினார்கள். மேற்படி சம்பவம் குறித்து போலீஸார் என்னை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவுசெய்தார்கள்.

குறுக்கு விசாரணை

சம்பவத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். சம்பவம் குறித்து எந்த விவரமும் எனக்கு தெரியாது என்றால் சரிதான். போலீஸார் என்னை விசாரணை செய்யவில்லை என்றால் சரிதான். போலீஸார் கையொப்பம் கேட்டதால் நான் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான்.